PRANAV JOURNAL OF FINE ARTS
ISSN: 2582-9513

# இசையினூடான இறையியல்

**கலாநிதி சுகன்யா அரவிந்தன்**
**முதுநிலை விரிவுரையாளர்,**
**இசைத்துறை, யாழ். பல்கலைக்கழகம்.**
saravinthon@hotmail.com/suhanyaa@univ.jfn.ac.lk

**ஆய்வுச்சுருக்கம்**

இறைவனை இசையாகக் கண்டவர்கள் இந்துக்கள். ஓசையாய் ஒலியாய் அண்டசராசங்களுக்கதிபதியாகிய சிவனை இசையின் கடவுளாகக் கண்டவர்கள். சிவனுடைய கையிலிருக்கின்ற உடுக்கை வாத்திய ஒலியின் அடிப்படையிலே அண்டசராசரங்களுடைய இயக்கம் நடைபெறுகின்றது என்பது சைவர்களுடைய, தமிழிசையினுடைய அடிப்படை.

நாமசங்கீர்த்தனம், மந்திர உச்சாடனம், பஜனை, திருமுறை போன்ற பல இசை வடிவங்கள் இறைவனைப் பாடிப் பரவுவதற்காகப் படைக்கப்பட்டிருக்கின்றன.

இதன் பின்னணியிலே இந்துசமய வழிபாட்டு முறைகளுள் நவக்ரஹ வழிபாடு முக்கியமானதொன்றாகக் கருதப்படுகின்றது. காலந்தோறும் இந்து சமயத்திலே ஏற்பட்ட பரிமாணத்தின் பேறாக அல்லது சமய சித்தாந்தப் பேருண்மையின் தெளிவாக, அல்லது வாழ்வியல் தத்துவங்களின் மறைபொருளின் வெளிப்பாடாக இந்த நவக்ரஹ வழிபாட்டை எடுத்துக்கொள்ளலாம். இந்த அடிப்படையிலே உபதெய்வங்களாகக் கொள்ளக்கூடிய நவக்கிரஹங்களுக்கான வழிபாட்டுக்கும் இசைக்குமுள்ள உறவுநிலை பற்றிய ஒரு பார்வையினை முன்வைப்பதாக இவ்வாய்வுக்கட்டுரை நகர்த்திச் செல்லப்படுகின்றது.

இசைக்கும் இறையியலுக்கும் மிக ஆழமான உறவுண்டு. எல்லா சமயங்களும் இசையினால் இறைவனைப் போற்றினாலும் இந்து சமயம் இறைவனை இசைவடிவினனாகக் காண்கின்றது. இசைக்கான உற்பத்தி மூலமாக இறைவனைக் காண்கின்றது. இந்து சமயத்திலே இறைவடிவங்கள் ஒவ்வொன்றும் ஏதொவொரு இசைக்குறியீட்டோடு இணைந்திருப்பது இந்து சமயத்துக்கும் இசைக்குமுள்ள உறவின் சிறப்புக்கான எடுத்துக்காட்டாகும்.

இந்த வகையிலே இந்து சமய வழிபாட்டு முறைகளுள் நவக்ரஹ வழிபாடு முக்கியமானதொன்றாகக் கருதப்படுகின்றது. காலந்தோறும் இந்து சமயத்திலே ஏற்பட்ட பரிமாணத்தின் பேறாக அல்லது சமய சித்தாந்தப் பேருண்மையின் தெளிவாக, அல்லது வாழ்வியல் தத்துவங்களின் மறைபொருளின் வெளிப்பாடாக இந்த நவக்ரஹ வழிபாட்டை

எடுத்துக்கொள்ளலாம். இந்த அடிப்படையிலே உப தெய்வங்களாகக் கொள்ளக்கூடிய நவக்ரஹங்களுக்கான வழிபாட்டுக்கும் இசைக்குமுள்ள உறவுநிலை பற்றிய ஒரு பார்வையினை முன்வைப்பதாக இவ்வாய்வுக்கட்டுரை நகர்த்திச் செல்லப்படுகின்றது.

இந்து சமயத்தின் வாழ்வியல் நம்பிக்கைகளான தோசங்களும் அதற்கான நிவர்த்திகளுக்குமாக இந்த நவக்ரஹ வழிபாடு முதன்மைப்படுத்தப்படுகின்றது என்பது பொதுவான, இந்துக்களின் எடுகோளாக இருக்கின்றது. கிரங்களின் நிலைகள், அவற்றினால் ஏற்படுகின்ற தோசங்கள், அதற்கான மாற்றீடுகள் என்பன இவ்விறை வழிபாட்டிலே முதன்மைப்படுத்தப்படுகின்றது. இந்த நவக்ரஹங்களின் வழிபாட்டுக்குரிய பதிகங்களாக திருஞானசம்பந்தமூர்த்திநாயனாரது இரண்டாம் திருமுறைக்கட்டமைப்பிலே வைத்தெண்ணப்படும் கோளறுபதிகம் முதன்மைப்படுத்தப்படுகின்றது.

இந்த நிலையிலே, கிபி 14ம் நூற்றாண்டுகளுக்குப் பின் பிரசித்தம் பெற்ற கர்நாடக சங்கீத மரபிலும் இந்த நவக்ரஹங்கள் முதன்மைப்படுத்தப்பட்டிருப்பதைக் கண்டுகொள்ள முடிகின்றது. குறிப்பாக, கிபி 16ம் நூற்றாண்டுகளிலே வாழ்ந்த சங்கீத மும்மூர்த்திகளுள் ஒருவராக வைத்தெண்ணப்படும் முத்துஸ்வாமி தீட்ஷிதருடைய கிருதிகளிலே மிகச்சிறப்பாகக் கண்டுகொள்ளமுடிகின்றது.

**திறவுச்சொற்கள்.**

நாமசங்கீர்த்தனம், நவக்ரஹ வழிபாடு, நவக்ரஹ கீர்த்தனை, கோளறு பதிகம், பாடிப்பரவுதல்.

**ஆய்வின் நோக்கம்.**

முத்துஸ்வாமி தீட்ஷிதர் ஏராளமான கிருதிகளை இயற்றி சங்கீத மும்மூர்த்திகளுள் ஒருவராகப் போற்றப்பட்டாலும், இவருடைய நவக்ரஹ ஸ்தோத்திரக்கிருதிகள் அளிக்கை நிலையிலே பெருமளவிலே பிரசித்தம் பெறவில்லை. இக்கிருதிகள் சமூகத்தினிடையே வெளிப்படுத்தப்பட வேண்டும். வழிபாட்டுநிலையிலோ அல்லது இசை சார் பயன்பாட்டியல் நிலையிலோ முதன்மைப்படுத்தப்படவேண்டும்.

தீட்ஷிதருடைய நவக்ரஹ ஸ்தோத்திரக் கிருதிகளுக்கும் சம்பந்தப்பெருமானின் கோளறு பதிகத்துக்கும், இரண்டுக்குமான தொடர்பும், பொருத்தப்பாடும் சார்ந்த பண்புநிலைகளின் பின்னணியில் கருத்துப் பொருண்மைகள் ஆராயப்படவேண்டும்.

ஆய்வின் நிறைவில் இந்து சமய மரபிலே துணைக்கடவுளர்களாக்கக் கொள்ளக்கூடிய நவக்ரஹகங்களுக்கான வழிபாட்டுமுறையிலே இசை பெறும் இடம் பற்றிய அறிவைப் பெற்றுக்கொள்ளமுடியும். இதன் மூலம் இந்து சமய வழிபாட்டிலே இசைபெறுகின்ற முக்கியத்துவம் பற்றியும், அதன் ஆழ்புலம் பற்றியும் புரிந்துகொள்ளமுடியும்.

தவிர, முத்துஸ்வாமி தீட்ஷிதருடைய நவக்கிரஹ கிருதிகள் மற்றும் சம்பந்தப்பெருமானின் கோளறுபதிகம் இரண்டுக்குமான ஒப்பியலையும் தெரிந்துகொள்ளமுடியும்.

இவற்றுக்கப்பால், நவக்ரஹ கிருதி தெலுங்கின் பின்புலத்தைக் கொண்டது. கோளறுபதிகம் தமிழ்ப் புலத்தினடியாகப் பிறந்தது. எனவே இரு வேறு தளங்களிலே நவக்ரஹ வழிபாட்டுமுறையிலே இருக்கக்கூடிய நடைமுறைகள் பற்றியும், இசையின் தளத்தை அடியாகக் கொண்டு இவ்விரு படைப்புக்களிலும் காணப்படுகின்ற சிறப்புக்களையும் இவ்வாய்வினடியாக இனங்காணக்கூடியதாக இருக்கும்.

நிறைவாக, நவக்ரஹ வழிபாட்டின் தளமாக இவ்வாய்வுக்கட்டுரை அமைகின்ற அதேவேளை, இசையியல் ஆய்வியல் புலங்களிலே இசையியல் நுட்பங்களை பற்றி, பக்தி நெறிநின்று பார்க்கக்கூடிய ஒரு தெளிவினை ஏற்படுத்துவதாகவும் இவ்வாய்வுக்கட்டுரை அமைகின்றது.

**ஆய்வின் தரவுப்பின்புலமும் முறையியலும்**

இந்த ஆய்வுக்கான அடிப்படைகளாகத் திருமுறைகள், அருட்பாடல்கள் போன்றவை வாசிப்புக்களாகப் பயன்படுத்தியிருந்தாலும் சம்பந்தப்பெருமானின் கோளறு பதிகமும், முத்துஸ்வாமி தீட்ஷிதருடைய நவக்ரஹகிருதிகளும் முக்கியமான ஆய்வுப்புலங்களாகக் கொள்ளப்படுகின்றன. அவற்றினுடைய எழுத்துருக்களும் ஒலிப்பதிவுகளும் இங்கு ஆய்வுக்காகப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. மேலும் இவ்விரு பாடல் தொகுதிகளுக்குமிடையிலான ஒப்புநோக்கும் தன்மையினையும் இவ்வாய்வுக்கட்டுரையிலே காணமுடியும்.

**இந்து வழிபாட்டுமரபில் நவக்ரஹ வழிபாடு**

இந்துக்களின் வழிபாட்டுக்குரியதாய் அமைந்த ஒன்பது கிரகங்களுக்கும் நவக்ரஹங்கள் என்று குறிப்பிடப்படுகின்றன. அவை சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், குரு, சுக்கரன், சனி, ராகு, கேது ஆகியவைகளாகும். இந்த நவக்ரஹங்களை வழிபடுவதன் மூலம் நமது பாவச்சுமைகளைக் குறைத்துக்கொள்ளலாம் என்கிறது இந்து தத்துவம்.

பிரபஞ்சத்தைப் படைத்த சிவன், உலகத்தில் உள்ள உயிர்களைப் படைக்க நான்முகக்கடவுளாகிய பிரம்மாவையும், மற்றும் படைத்த உயிர்களைக் காக்க விஷ்ணுவையும் படைத்தார்.

ஒரு உயிரினம் பிறவா நிலையை அடையவேண்டுமாயின் தன் கர்மவினைகளை முழுமையாக அனுபவிக்க வேண்டும். இவ்வாறு ஒரு உயிரினம் தன் கர்ம வினைகளை சரிவர (பாவங்கள் மற்றும் நன்மைகள்) அனுபவித்து முக்தி பெற, மானுடரை

ISSN: 2582-9513

வழிப்படுத்துவதற்காகச் சிவனிடமிருந்து உருவாக்கப்பட்ட நாயகர்களே 'நவநாயகர்கள். இவர்கள் அனைவரும் சிவனுக்குக் கட்டுப்பட்டவர்கள்.

நவ நாயகர்கள் அனைவரும் ஒரே காலத்தில் உருவானவர்களல்லர். பல ரிஷிகள் மற்றும் முனிவர்களுக்கு மகன்களாகப் பிறந்து, அவர்களின் வழிகாட்டலின் படியும், இவர்களின் தவ வலிமையாலும் பல்வேறு இன்னல்கள் மற்றும் இடைஞ்சல்களை அனுபவித்தும் நவக்ரஹ மண்டலத்தின் இணைந்தார்கள்.

சிவனால் உபதேசிக்கப்பட்ட பாவம், புண்ணியம் என்னும் கணக்குகள் சட்டங்களாக மாற்றப்பட, அந்த சட்டங்களை செயல்படுத்தும் செயலதிகாரிகளாக நவக்கிரஹங்கள் செயல்படுகின்றன.

இந்த நிலையிலே முக்தியின்பமடைவதாற்காகப் பூவுலகிலே உழன்று திரியும் ஆன்மாக்கள் தம்முடைய பாவ புண்ணியங்களைத் தீர்த்துக்கொள்வதற்காக இந்த நவக்கிரஹங்களை வழிபடுகின்றன.

**முத்துஸ்வாமி தீட்ஷிதரும் நவக்ரஹ வழிபாடும்**

கர்நாடக இசையின் மும்மூர்த்திகளுள் ஒருவராக வைத்தெண்ணப்படுபவர் முத்துஸ்வாமி தீட்ஷிதர். சக்தி உபாசகர். தமிழ், தெலுங்கு, சமஸ்கிருதம் போன்ற மொழிகளிலே பாண்டித்தியம் பெற்றவர். உலகின் நிலையாமை பற்றி மிகவும் உணர்ந்தவர். முருகப்பெருமானின் திருவருள் கிடைக்கப்பெற்றவர்.

முத்துஸ்வாமி தீட்ஷிதர் கிபி 1776-1835 இல் வாழ்ந்தவர். அழகிய சமஸ்கிருதப் பதங்களுடன் இறைவனைப் புகழ்ந்து பல அரிய அற்புதமான கிருதிகளைப் படைத்தவர்.

இசையியல் தளத்திலே இவருடைய படைப்புக்கள் மிகச்சிறப்பாகப் போற்றப்படுகின்றன. சங்கீத மும்மூர்த்திகளின் உருப்படிகளின் அமைப்பியலின் அடிப்படையில் பின்வருமாறு உவமிக்கப்படுகின்றார்கள். சற்குரு ஸ்ரீ தியாகராஜசுவாமிகள் சங்கீதத் தென்றலாகவும், சியாமா சாஸ்த்திரிகள் இசைச்சூறாவளியாகவும் முத்துஸ்வாமி தீட்சிதர் சங்கீதக்கடலாகவும் வர்ணிக்கப்படுகின்றார். (ரங்கராமானுஜ அய்யங்கார். ஆர்: 1993: 3)

முத்துஸ்வாமி தீட்ஷிதர் அவர்கள் சங்கீதம், யோக சாஸ்த்திரம், மந்திரம், உபநிடதம், சமஸ்கிருதம், தெலுங்கு முதலியவற்றில் பாண்டித்தியம் பெற்றவர். சமஸ்கிருதச் சொற்களை அழகாகத் தன்னுடைய கிருதிகளிலே அமைத்திருப்பவர். கிருதிகளை வாசிக்கும் தோறும் அவற்றுள் ஆழ்ந்த மந்திர தந்திரக் கருத்துக்கள் பொதிந்திருப்பதைத் தெரிந்துகொள்ள முடிகின்றது.

இவருடைய கிருதிகளைப் பூரணமாகப் புரிந்து கொள்வதற்கு உபநிடத் தத்துவங்கள், மந்திரங்கள், கிரியை முறைகள், ஸ்ரீசக்ர விபரங்கள் எனப் பலவற்றின்

அறிவும் தெளிவும் இருக்கவேண்டியது அவசியமாகின்றது. அதனால் தான் சங்கீதக்கடலுக்கு இவருடைய படைப்புக்கள் ஒப்பிடப்படுகின்றன. மூழ்கும் தோறும் பற்பல முத்துக்களை வழங்கவல்ல கிருதிகளை இவருடைய படைப்பிலே காணமுடியும்.

**நவக்ரஹ ஸ்தோத்திரக்கிருதிகள்**

இவர் எழுதிய கிருதிகளுள் நவக்ரஹ ஸ்தோத்திரக்கிருதிகள் முக்கியமான தொகுதிக் கீர்த்தனைகளாகக் காணப்படுகின்றன. சூரியன் சந்திரன் முதலான நவக்ரஹங்களுக்கும் ஒவ்வொரு கிருதிகளாக இவர் படைத்திருப்பது சிறப்பான ஒரு விடயமாகக் காணப்படுகின்றது. இறைவனை இசைபாடிப் பரவுவதன் வழி, பிறவிப்பிணியகற்றலாம் என்கின்ற சைவ தத்துவத்தின் படி ஒவ்வொரு கிரகத்துக்கும் ஒவ்வொரு கிருதிகளை இவர் யாத்திருக்கின்றார்.

மேலும், ஒவ்வொரு கிரகங்களினதும் ஸ்தானம், இலட்சணம், செயல், மந்திரம், தலம், வணங்கும் முறை, கிரகங்களுக்கு விருப்பமானவைகள், இக்கிரஹங்களோடு தொடர்புடைய புராண இதிகாசக்கதைகள் போன்ற பலவிடயங்கள் இவருடைய கிருதிகளிலே தெளிவுபடுத்துவனவாக அமைக்கப்பட்டிருப்பது மிகச்சிறப்புக்குரிய விடயமாகும். இசை என்பதற்கப்பால் இறைதுதி என்பதும் வழிபாடு என்பதும் இங்கு முதன்மைப்படுத்தப்பட்டிருப்பதைக் காணலாம்.

இவ்வுருப்படிகள் பற்றி விபரமாக நோக்கலாம்.

**சூர்ய பகவான்**

ஸௌராஷ்டிர இராகத்திலே சதுஸ்ர துருவதாளத்திலே அமைக்கப்பட்ட 'ஸுர்யமூர்த்தே' எனத்தொடங்கும் சூரிய பகவானுக்குரிய கிருதி அமைக்கப்பட்டிருக்கின்றது.

**பல்லவி**

சூர்ய மூர்த்தே நமோஸ்துதே
ஸுந்தர சாயாதிபதே

**அனுபல்லவி**

கார்ய காரணாத்மக ஜகத் ப்ர
காஷ ஸிஹ்ம ராஜ்யாதிபதே
ஆர்ய வினுத தேஜஸ்பூர்தே ஆரோக் யாதி பலத கீர்தே

**சரணம்**

ஸாரஸ மித்ர மித்ர பானோ ஸஹஸ்ர கிரண கர்ண ஸுனோ
க்ரூர பாப ஹர க்ரு ஷ்யானோ குருகுஹ மோதித ஸ்வபானோ
ஸுரி ஜனேடித ஸுதினமணே ஸோமாதி க்ரஹ ஸிகாமணே
தீரார்ச்சித கர்ம ஸாக்ஷிணே திவ்யதர ஸப்தாஸ்வ ரதினே
ஸௌராஷ்ட்ரார்ண மந்த்ராத்மனே ஸௌவர்ண ஸ்வரூபாத்மனே
பாரதீக்ஷ ஹரிஹராத்மனே பக்தி முக்தி விதரணாத்மனே

(ரங்கராமானுஜ அய்யங்கார். ஆர்: 1993:29)

என்றவாறு இக்கிருதி அமைக்கப்பட்டிருக்கின்றது.

உலகினுக்கு வெளிச்சம் தருபவரும். சிம்ம ராசியின் அதிபதியும், மகான்களால் பூஜிக்கப்படுபவரும், தேஜஸ் எனும் அதிப்ரகாசம் செய்பவரும், ஆரோக்கியத்தைக் கொடுப்பவரும், தாமரைக்கு மித்ரனும், ஆயிரம் கிரணங்களை உடையவரும், கர்ணனின் பிதாவும், கொடிய பாவங்களைப் போக்குபவரும், குருகுஹருக்கு சந்தோசத்தை வழங்குபவரும், இரவில் அக்கினியில் வசிப்பவரும், ஞானிகளால் ஸ்தோத்திரம் செய்யப்பட்டவரும், பகலுக்கு அதிபதியும், சந்திரன் முதலான கிரஹங்களில் சிரேஷ்டரும், தீரர்களால் பூஜிக்கப்படுபவரும், எல்லாக்காரியங்களுக்கும் சாட்சியானவரும், ஏழு குதிரைகள் பூட்டப்பட்ட ரதத்தில் பவனி வருபவரும், சூர்ய அஷ்டாக்ஷர மந்திரத்தால் அடையக்கூடியவரும், ஸ்வர்ண ரூபமுடையவரும், பக்தி, மோக்ஷம் இவைகயை அருளுபவரும், அழகிய சாயாதேவியின் பதியுமான ஶ்ரீ சூர்ய பகவானே, உமக்கு நமஸ்காரம்' என்பது இக்கிருதியின் தமிழ்சாரம்.

தீட்ஷிதருடைய கிருதிகளில் காணப்படக்கூடிய சிறப்பான இசைநுட்பமாகக் கொள்ளக்கூடிய மத்யமகால சாகித்யம் மற்றும் நாமமுத்திரை போன்ற இசைச்சிறப்புக்களோடு இவ்வுருப்படி அமைக்கப்பட்டிருக்கின்றது.

**சந்திர தேவன்**

இவ்வாறே, 'சந்த்ரம் பஜ மானச', குளிர்ந்த கிரணங்களையுடைய, சிவன் சிரத்தை அலங்களிக்கின்ற சந்திர தேவனின் சிறப்புக்களை முன்வைக்கின்றார்.

இராகம்: அசாவேரி , தாளம் : சதுஸ்ர மட்டியம்

**பல்லவி**

சந்த்ரம் பஜ மானஸ ஸாது ஹ்ருதய ஸத்ருக்ஷம்

**அனுபல்லவி**

இந்ராதி லோக பாலேடித தாரேக்ஷம்
இந்தும் ஷோடக்ஷ கலாதரம் நிஷாஹரம்
இந்திரா ஸஹோதரம் ஸுதாகர மனிக்ஷம்

**சரணம்**

ஷங்கர மௌளி விபூஷணம் ஷீத கிரணம் சதுர்புஜம்

மதனச் சத்ரம் ஷாபாகரம் வெங்கடேக்ஷநயனம்
விராண் மனோ ஜனனம் விதும் குமுத மித்ரம்
விதி குருகுஹ வக்த்ரம்

ஷஷாங்கம் கீஷ்பதி ஸ்ஷாபானுக்ரஹ பாத்ரம் ஸரஸ் சந்திரிகா தவள
ப்ரகாஸ்ய காத்ரம்

கங்கண கேயூர ஹார மகுடாதி தரம் பங்கஜ ரிபும் ரோஹிணீ ப்ரியகர சதுரம்

(ரங்கராமானுஜ அய்யங்கார். ஆர்: 1993:31)

அதாவது, ‘மனமே! சாதுக்களின் மனதை ஒத்தவரும், அஷ்டதிக்குப் பாலகர்களால் வழிபாடு செய்யப்படுபவரும், தாரையின் நாயகரும், லக்ஷ்மியின் சகோதரரும், எப்போதும் அமிர்தத்தை வர்ஷிப்பவரும், குளிர்ந்த கிரகணங்களையுடையவரும், சிவனுடைய சடாமுடியிலே ஆபரணமாகத் திகழ்பவரும், மன்மதனுக்குக் குடையாயும், ஸ்ரீவெங்கடேசருக்கு நேத்ரமாயும், பகவானுடைய மனதில் உதித்தவரும், ஆம்பலின் மித்திரரும், சுப்பிரமணியருடைய முகமாயும் இருப்பவரும், முயலை அங்கமாக உடையவரும், ப்ரஹஸ்பதியின் சாபத்திற்கும் அனுக்கிரஹத்திற்கும் பாத்திரமானவரும், வெள்ளை மேனியுடையவரும், காப்பு, தோள்வளை, மாலை, கிரீடம் இவைகளை தரித்தவரும், தாமரை புஷ்பத்திற்கு விரோதியும், ரோஹிணியில் உச்சம் பெற்றவரும், ரோஹிணிக்கு மிகவும் ப்ரியமானவருமான சந்திரனை ஸ்தோத்திரம் செய்’ என்பது சந்திர தேவனுக்குரிய கிருதி அமைகின்றது.

**செவ்வாய் தேவன்**

இராகம் : சுருட்டி , தாளம் : ரூபகம்

**பல்லவி.**

அங்காரக மாஷ்ர யாம் யஹம்
வினதா ஷ்ரித ஜன மந்தாரம்
மங்கள வாரம் பூமி குமாரம் வாரம் வாரம்

**அனுபல்லவி**

ஷ்ருங்காரக மேஷ வ்ருஷ்சிக ராஷ்யாதிபதிம்
ரக்தாங்கம் ரக்தாம்பராதி தரம் ஷக்தி ஷுல தரம்
மங்களம் கம்பு களம் மஞ்சுளதர பத யுகளம்
மங்கள தாயக மேஷ துரங்கம் மகரோத்துங்கம்

**சரணம்**

தானவ ஸுர ஸேவித மந்தஸ்மித விலசித வக்ரம்
தரணி ப்ரதம் ப்ராதம் ப்ராத்ரு காரகம் ரக்த நேத்ரம்
தீன ரக்ஷகம் பூஜித வைத்யனாத க்ஷேத்ரம்
திவ்யௌகாதி குருகுஹ கடாக்ஷனுக்ரஹ பாத்ரம்
பானு சந்த்ர குரு மித்ரம் பாஸமான ஸுளத்ரம்
ஜானுஸ்த ஹஸ்த சித்ரம் சதுர்புஜ மதி விசித்ரம்

(ரங்கராமானுஜ அய்யங்கார். ஆர்: 1993:34)

அதாவது, பூமாதேவியின் குமாரனும், செவ்வாய்க் கிழமைக்கு அதிதேவதையும் பக்தர்களுக்கு சுப பலன்களை அருள்பவரும், மேஷ விருச்சிக ராசிகளுக்கு அதிபதியும், மேஷ வாகனமுடையவரும், மகரத்தில் உச்சஸ்தானத்தை அடைந்தவரும், சிவந்த மேனி, சிவந்த வஸ்த்திரம், சக்தி, சூலம், இவைகளை உடையவரும், அதிமிருதுவான பாதங்களை உடையவரும், தேவர்களாலும் அசுரர்களாலும் பூஜை செய்யப்பட்டவரும், புன்சிரிப்புடன் விளங்குகின்ற முகத்தையுடையவரும், பூமியை ஆள்பவரும், சகோதரனைக் கொடுப்பவரும், வைத்யநாத சத்திரத்திரத்தில் ஈசனை பூஜித்தவரும், குருகுஹனுக்கு கிருபை செய்கிறவரும், சூரியன், சந்திரன், குரு இம்மூவருக்கும் மித்ரரும், பத்தினியுடன் விளங்குபவரும், நான்கு புஜங்களுடன் முழங்காலில் கையை வைத்துக்கொண்டும், பிரகாசிக்கும் செவ்வாய் பகவானை சரணடைகின்றேன்', என்பது இக்கிருதியின் தமிழ்சாரம்.

**புதன் தேவன்**

இராகம்: நாட்டைக்குறிஞ்சி, தாளம் : மிஸ்ர ஜம்பை

**பல்லவி**

புத மா ஷ்ரயாமி ஸததம்
ஸுர வினுதம் சந்ர தாரா ஸுதம்

**அனுபல்லவி**

புத ஜனைர் வேதிதம் பூஸுரைர் மோதிதம்
மதுர கவிதா ப்ரதம் மஹனீய ஸம்பதம்

**சரணம்**

குங்கும ஸம த்யுதிம் குருகுஹ முதாக்ருதிம்
குஜ வைரிணம் மணி மகுடஹார கேயூர
கங்கணாதி தரணம்
கமனீயதர மிதுன கன்யாதிபம் புஸ்தக கரம் நபும்ஸகம்
கிங்கர ஜன மஹிதம் கில்பிஷாதி ரஹிதம்
ஷங்கர பக்த ஹிதம் ஸதானந்த ஸஹிதம்

(ரங்கராமானுஜ அய்யங்கார். ஆர்: 1993:37)

அதாவது, 'தேவர்களால் பூஜிக்கப்பட்டவரும், சந்திரனுக்கும், தாரைக்கும் பிறந்தவரும், புத்திமான்களால் அறியப்படுபவரும், ஐஸ்வரியத்தை அளிப்பவரும், குங்குமத்திற்கொப்பான காந்தியுடையவரும், குருகுஹனுக்கு சந்தோசம் கொடுப்பவரும், செவ்வாய்க்கு சத்துருவும், இரத்தினமிழைத்த மாலை, தோள்வளை, கங்கணம், இவைகளை தரிப்பவரும், அழகான மிதுன கன்யா ராசிகளுக்கு அதிபதியும், புஸ்தகம் உடையவரும், பக்தர்களால் புகழப்பட்டவரும், பாபமில்லாதவரும், சிவபக்தர்களுக்கு

மிகவும் அருள் செய்கிறவரும், எப்பொழுதும் ஆனந்தமாயிருப்பவருமான புத பகவானை பூசிக்கின்றேன்’. புதன் தேவனுடைய கிருதியின் தமிழ்சாரம் இவ்வாறு அமைகின்றது.

**குரு தேவன்**

இராகம்: அடானா, தாளம் : திஸ்ரதிரிபுடை

**பல்லவி**

ப்ருஹஸ்பதே தாரா பதே - ப்ரஹ்ம ஜாதே நமோஸ்து தே

**அனுபல்லவி**

மஹா பல விபோ கீஷ்பதே - மஞ்ஜுு தனுர் மீனாதிபதே
மஹேந்த்ராத் யுபாஸி தாக்ருதே மாதவாதி வினுத தீமதே

**சரணம்**

ஸுரா சார்ய வர்ய வஜ்ர தர - ஷுப லக்ஷ்ண ஜகத் த்ரய குரோ

ஜராதி வர்ஜிதாக் ரோத கச ஜனகா - ஷ்ரித ஜன கல்பதரோ

புராரி குருகுஹ ஸம்மோதித - புத்ர காரக தீன பந்தோ
பராதி சத்வாரி வாக் ஸ்வரூப ப்சாசுக தயா ஸிந்தோ

நிராமயாய நீதி கர்த்ரே நிரங்குஷாய விஷ்வ பர்த்ரே-
நிரஞ்ஜனாய புவன போக்த்ரே நிரம்ஷாய மக ப்ரதாத்ரே

(ரங்கராமானுஜ அய்யங்கார். ஆர்: 1993:40)

அதாவது, ‘ப்ரும்ம குலத்தில் உதித்தவரும், நட்சத்திரங்களின் அதிபதியும், மிகுந்த பிரகாசமுடையவரும், தனுர், மீன ராசிக்கதிபதியும், இந்திரன் முதலியவர்களால் போற்றப்படுபவரும், விஷ்ணு முதலியோரால் துதிக்கப்படுபவரும், புத்தியில் நிலைத்திருப்பவரும், தேவர்களுக்கும் மூவுலகங்களுக்கும் குருவானவரும், வஜ்ராயுதம் தரித்தவரும், நல்ல அழகுவாய்ந்து, மூப்பொழிந்தவரும், கசனுடைய பிதாவும், நம்பினோர்க்கு நல் வரங்களை அருளுபவரும், சுப்பிரமணிய சுவாமிக்கு சந்தோசத்தை வழங்குபவரும், புத்திரனைக் கொடுப்பவரும், ஏழைகளைக் காப்பாற்றுபவரும், கருணைக்கடலும், நியாயம் என்கின்ற சாஸ்த்திரத்துக்கு ஆசிரியரும், எல்லா உலகங்களையும் காப்பாற்றுபவரும், பேச்சு வன்மையை அருளுபவருமான குரு பகவானை வணங்குகின்றேன்’, என்பது தமிழ் பொழிப்பு.

**அக்னி தேவன்**

இராகம்: பரஸ் தாளம்: கண்ட அட

**பல்லவி**

ஸ்ரீ ஷுக்ர பகவந்தம் சிந்தயாமி
ஸந்ததம் ஸகல தத்வக்ஞம்

**அனுபல்லவி**

ஹே ஷுக்ர பகவான் மாம் ஆஷு

பாலய வ்ருஷ துலாதீக்ஷ தைத்ய ஹிதோப தேக்ஷ

கேஷவ கடாக்ஷைக நேத்ரம் - கிரீடதரம் தவள காத்ரம்

**சரணம்**

விம்ஷதி வத்ஸரோடு தஷா விபாக மஷ்ட வர்கம்
கவிம் களத்ர காரகம் ரவி நிர்ஜர குரு வைரிணம்

நவாம்ஷ ஹோராத்ரேக்காணாதி
வர்கோத்த மாவஸர ஸமயே
வக்ரோச்ச நீச ஸ்வக்ஷேத்ர வர கேந்த்ர மூல த்ரிகோணே

த்ரிம்ஷாம்ஷ - ஷஷ்ட்யாம் ஷைராவதாம்ஷ - பாரிஜாதாம்ஷ

கோபுராம் ஷ - ராஜயோக காரகம் - ராஜ்ய ப்ரதம் - குரு குஹ முதம்

(ரங்கராமானுஜ அய்யங்கார். ஆர்: 1993:43)

அதாவது, 'சகல உண்மைகளையும் அறிந்த ஸ்ரீ சுக்கிர பகவானை எப்பொழுதும் தியானிக்கின்றேன். துலா ராசிக்கு அதிபதியும், அசுர குருவும், விஷ்ணுவின் கடாட்சத்தால் ஒரு கண்ணை உடையவரும், வெண் மேனியும், கிரீடமும் தரித்த சுக்ர பகவான் என்னைக் காப்பாற்றட்டும். சூரியன் மற்றும் குரு இவர்களுக்கு விரோதியும், நவாம்சம், மூலதிரிகோணம், இவைகளில் வக்ரம், நீசம், ஸ்வக்ஷேத்ரம், கேந்திரம், திரிம்சாம்சம், ஷஷ்டாம்சம், பாரிஜாதாம்சம், கோபுராம்சம், இவைகளைப் பெற்றால் இராஜயோகம் அளிப்பவரும், ராஜபதவியை அளிப்பவரும், குருகுஹருக்கு சந்தோஷம் அளிப்பவருமான ஸ்ரீ சுக்கிரபகவானுக்கு வணக்கம்' என்பது இக்கிருதியின் தமிழ்பொழிப்பு.

**சனி தேவன்**

இராகம்: யதுகுலகாம்போதி, தாளம்: ஆதி

**பல்லவி**

திவாகர தனுஜம் ஷைனைஷ்சரம் - தீரதரம் ஸந்ததம் சிந்தயேஹம்

**அனுபல்லவி**

பவாம்பு நிதௌ நிமக்ன ஜனானாம் - பயங்கரம் அதிக்ரூர பலதம்

பவானீஷ கடாக்ஷ் பாத்ர பூத - பக்திமதாம் அதிஷயஷுப பலதம்

**சரணம்**

காளாஞ்ஜன காந்தி யுக்த தேஹம் - கால ஸஹோதரம் காக வாஹம்

நீலாம் ஷுக புஷ்ப மாலா வ்ருதம் - நீல ரத்ன பூஷணாலங்ருதம்

மாலினீ வினுத குருகுஹ முதிதம் - மகர கும்ப ராசி நாதம்

தில தைல மிஷ்ரிதான்ன தீப ப்ரியம் - தயா சுதா ஸாகரம் நிர்பயம் -

கால தண்ட பரிபீடித ஜானும் - காமிதார்த்த பலத காமதேனும்

கால சக்ர பேத சித்ர பானும் - கல்பித சாயா தேவீ ஸுனும்

(ரங்கராமானுஜ அய்யங்கார். ஆர்: 1993:46)

அதாவது, 'சூர்ய குமாரரும் ராசிகளில் மொதுவாய் சஞ்சரிப்பவரும், சம்சாரக்கடலில் மூழ்கியவர்களுக்கு பயமளிப்பவரும், சிவகடாட்சம் பெற்றவர்களுக்கு மிகவும் நல்ல பலன்களைத் தருபவரும், மை போன்ற கருமேனி உடையவரும், நீலநிற வர்ணமுள்ள புஷ்பம், ரத்னமிழைத்த ஆபரணங்களை உடையவரும், 'மாலினி' என்ற மந்திரத்தால் அடையக்கூடியவரும், மகர கும்ப ராசிகளுக்கதிபதியும், நல்லெண்ணை, தீபம், எள்ளன்னம் இவைகளில் விருப்பமுள்ளவரும், தயையுடையவரும், பயமற்றவரும், காலசக்கரத்தால் அடிபட்ட முழங்காலை உடையவரும், வரமளிப்பதில் காமதேனுவுக்கு சமமானவரும், சாயாதேவியின் புத்தரருமான சனிஸ்வரனை எப்பொழுதும் தியானிக்கின்றேன்' என்றவாறு இக்கிருதியின் தமிழ்சாரம் அமைகின்றது.

**ராகு தேவன்**

இராகம் : ரமா மனோஹரி, தாளம் : ரூபகம்

**பல்லவி**

ஸ்மராம் யஹம் ஸ்தா ராஹுும் - ஸுர்ய சந்த்ர வீசஷ்ம் விக்ருத தேஹம்

**அனுபல்லவி**

ஸுரா ஸுரம் ரோக ஹரம் - ஸர்பாதி பீதி ஹரம்

ஸுர்ய பாஸன ஸுக கரம் - சூலாயுத தர கரம்

**சரணம்**

கராள வதனம் கடினம் - கயானார்ண கருணார்த்ரா பாங்கம்
சதுர்புஜம் கட்க கேடாதி தரணம்

சர்மாதி நீல வஸ்த்ரம் - கோமேதகா பரணம் - ஸனி ஸுக்ர மித்ர
குருகுஹ ஸந்தோஷ கரணம்

(ரங்கராமானுஜ அய்யங்கார். ஆர்: 1993:49)

அதாவது, 'சூர்ய, சந்திரர்களுடன் கிரஹண காலத்தில் புலப்படுபவரும், துண்டித்த உடலை உடையவரும், தேவ, அசுர குணங்களையுடையவரும், வியாதியையும் சர்ப்ப பயத்தையும் போக்குபவரும், உக்கிரமானவரும், 'கயான' என்று தொடங்கும் மந்திர உச்சாடனத்தால் அடையக்கூடியவரும். கருணையுடைய கண்களுடன், கத்தி, கேடயம் முதலியவைகளைத் தரிக்கும் நான்கு புஜங்களுடன், கோமேதக ரத்னத்தை அணிந்து, சனி,

ISSN: 2582-9513

சுக்கிரர்களுக்கு நட்பு உடையவரும், குருகுஹருக்கு சந்தோசம் அளிப்பவருமான ராகு பகவானை என்பொழுதும் தியானிக்கின்றேன்', என்று இக்கிருதியின் தமிழ்சாரம் அமைகின்றது

**கேது தேவன்**

இராகம்: சாமரம், தாளம்: ரூபகம்

பல்லவி

மஹாஸுரம் கேது மஹம் - பஜாமி சாயா க்ரஹ வரம்

**அனுபல்லவி**

மஹாவிசித்ர மகுட தரம் - மங்கள வஸ்த்ராதி தரம்

நரபீட ஸ்திதம் ஸுகம் - நவக்ரஹ யுதம் ஸகம்

**சரணம்**

கேதும் க்ருண்வன் மந்த்ரிணம் - க்ரோத நிதி ஜைமினம்

குளுத்தாதி பக்ஷணம் - கோண த்வஜ பதாகினம்

குருகுஹ சாமர பரணம் – குணதோஷ ஜிதா பரணம்

க்ரஹணாதி கார்ய காரணம் - கரஹா பஸவ்ய ஸஞ்சாரிணம்

(ரங்கராமானுஜ அய்யங்கார். ஆர்: 1993:50)

அதாவது, 'அசுரர்களில் சிறந்தவரும் விசித்திரமான மகுடமும் மஞ்சள் வஸ்த்ரமும் தரிப்பவரும், மனித உடலை சுக ஆசனமாகக் கொண்டவரும் நவக்ரஹங்களில் ஒன்றான ராகுவின் நண்பரும், 'கேதும் க்ருண்வன்' என்ற மந்திரத்தால் அடையக்கூடியவரும், அதிக கோபமுள்ளவரும், ஜைமினி வம்சத்தில் பிறந்தவரும், கொள்ளு முதலியவைகளை உண்பவரும், கோண வடிவமான கொடியை உடையவரும், சுப்ரமணியருக்குச் சாமரம் தாங்குபவரும், கிரஹங்கள் சுற்றி வருவதில் அப்ரதக்ஷிணமாகச் சுற்றுபவருமான கேது பகவானை வணங்குகின்றேன்' என்றவாறு இக்கிருதிக்குரிய தமிழ்சாரம் அமைகின்றது.

**கோளறு பதிகமும் நவக்ரஹ ஸ்தோத்திரக்கிருதிகளும்.**

நவக்கிரகங்களின் வழிபாட்டுமுறை என்பது ஆதிகாலம்தொட்டே வழக்கமாயிருப்பினும் பக்திநெறி பிரவாகித்து சைவத்தையும தமிழையும்; வளர்த்து இசைப்பிரவாகமாக இறைவழிபாடு இயற்றப்பட்டகாலமாகிய தேவார முதலிகள் காலத்திலே மேலும் முக்கியத்துவப்படுத்தப்பட்டது. சைவமும் தமிழும் மீள கட்டியெழுப்பப்படவேண்டிய சூழ்நிலையிலே, சமூகத்தை சமயத்தின்பால் வழிப்படுத்த இசையினைக் கருவியாகக் கொண்டு வெற்றிபெற்றவர்கள் தேவார முதலிகள். இவர்களுள் சம்பந்தப்பெருமான் பொற்றாளம் கொண்டு பாடிப்பரவிய பதிகங்களுள் கோளறு பதிகமும் முக்கியமானது.

பாண்டிய நாட்டரசன் நெடுமாறப்பாண்டியன் சமண சமயத்தைச சார்ந்தமையை மங்கையர்க்கரசியார் வாயிலாக அறிந்துகொண்ட சம்பந்தர், மதுரைக்குப் புறப்படுகின்ற பொழுது, நாளும் கோளும் நலமாக இல்லை என்று அறிந்தும் சிறிதும் மனம் தளராமல் உமையொடுபாகன் உள்ளத்தில் இருக்கும்போது கிரகங்கள் 'நல்லதே செய்யும் நல்லதே செய்யும்' என்று பத்துப்பாடல்களைப் பாடிவிட்டு மதுரை மாநகரை அடைந்தார் என்பது வரலாறு.

'மாசறு திங்கள்கங்கை முடிமேலணிந்தென் உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி சனி பாம்பிரண்டும் உடனே
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல' என்று இறைவன் மனத்துள்ளிருக்கையிலே நாளும் கோளும் நமையென்ன செய்யும் என்று இறையருளின் சிறப்புப்பற்றிப் பாடுகின்றார்.

கோள் என்பது தமிழில் விரித்துப்பொருள் கூறின் 'கொள்ளுதல்' என்று பொருள்படும். நம் மனம், சொல், செயல் என்று அனைத்தையும் ஆட்கொண்டு நம் வாழ்வின் மீது ஆதிக்கம் செலுத்தும் சக்தி படைத்ததால் நவக்ரஹங்களைக் கோள்கள் என்று அழைக்கின்றோம். அறு என்றால் விலக்கு அல்லது நீக்கு என்று பொருள். பதிகம் என்பது பத்துப்பாடல்களைக் கொண்ட ஒரு தொகுப்பு. எனவே கிரகங்களின் ஆதிக்கத்தை விலக்கி நம் வாழ்வில் நலம் கொடுக்கும் இந்தப் பத்துப்பாடல்கள் கொண்ட தொகுப்பு 'கோளறு பதிகம்' எனப் பெயர் பெற்றது. (வசந்தகுமார். இராச.: 2015: 65)

மேலும் சம்பந்தப்பெருமான் காலத்திலே தமிழிசை தென்னாட்டிலே மேலோங்கியிருந்தகாலம்;. பக்திக்குப் பதிகம் என்கின்ற வகையிலே பதிக அமைப்பிலே, எண்சீர் சந்தவிருத்தப்பாவிலே ஓசையின்பம் துலங்க, சந்தம் மிகு பாட்டாகவே பாடியிருக்கின்றார். ஒவ்வொரு பாடலிலும் முதலிரு வரிகளும் இறைவன் பெருமைகளை எடுத்துச்சொல்லி, இறுதி வரிகளிலே அவ்வாறான பெருமை பொருந்தியவர் நம் உள்ளத்திலிருப்பின், ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல அடியாரவர்க்குமிகவே' என்று, எல்லாம், எக்கணமும் நல்லதே என்று பாடி நிறைவு செய்கின்றார். தெலுங்கிசை முன்னின்ற காலத்திலே தீட்~pதர் வாழ்ந்தார். கீர்த்தனை மரபின் முகிழ்ப்பின் தொடர்ச்சியிலே இதே பொருண்மையிலே, இறை துதிபாட கீர்த்தனைக் கட்டமைப்பினை தீட்சிதர் பின்பற்றியிருக்கின்றார்.

**முடிவும் பயனும்**

இந்த நிலையிலே கிபி 6,7ம் நூற்றாண்டுகளிலே தோற்றம் பெற்ற கோளறு பதிகம் 'இறைவனிருக்க நமக்குக் கொள் என்செய்யும்' என்று இறையருளைப் பாட, கிபி

ISSN: 2582-9513

17ம்,18ம் நூற்றாண்டுகளிலே தோற்றம் பெற்ற தீட்ஷிதருடைய நவக்ரஹக்கிருதிகள், நவக்ரஹங்களையே போற்றிப்பாடுவதாக அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் தீட்ஷிதருடைய நவக்ரஹ ஸ்தோத்திரக்கிருதிகளுக்கு சம்பந்தருடைய கோளறுபதிகம் கோடிட்டுக் கொடுத்திருக்கின்றது. தீட்ஷிதரும் ஆழ்வார்கள், நாயன்மார்களைப் போல தலங்கள் தோறும் எழுந்தருளியிருக்கும் இறைவனைப் பாடுவதைப் பணியாகக்கொண்டவர். பக்தியையே வாழ்வாகக் கொண்டு வாழ்ந்தவர் தீட்ஷிதர்.

பக்தி வெளிப்பாட்டுக்குரிய இசை வடிவங்களை இவ்விரு ஆளுமைகளுடைய படைப்புக்களிலிருந்தும் தெரிந்துகொள்ள முடிகின்றது. தவிர, தீட்ஷிதர் அவர்கள் தன்னுடைய பாரம்பாரியம் மாறாமல் இறைபுகழை பாடியிருப்பதும், ஒவ்வொரு கிரஹங்களுடைய பல தகவல்களைத்திரட்டி ஒவ்வொரு கிருதியிலும் வழங்கியிருப்பது கிருதி வடிவங்களாலும் தரவுக்கட்டமைப்பினைப் பேணமுடியும் என்கின்ற உண்மையினையும் புரிந்துகொள்ளமுடிகின்றது.

மேலும், தீட்ஷிருடைய கிருதிகள் சமஸ்கிருத மொழியிலாக்கப்பட்டவை. இவற்றின் பொருள் புரிந்து பாடுதல் என்பது, எவ்வாறு கோளறுபதிகத்தை இறை வழிபாட்டுக்காக பாடுகின்றோமோ அவ்வாறே இக்கிருதிகளையும் வழிபாட்டிலே இணைத்துக் கொள்வதற்கான வாய்ப்புக்களும் பயன்களும் நிறையவே ஏற்படுத்தப்படவேண்டும்.

இரு படைப்புக்களின் தோற்ற காலத்தை எடுத்துநோக்குகின்ற பொழுது இரண்டுமே இறைக்கும் இசைக்கும் இடையிலே இருக்கின்ற நெருக்கமான பந்தத்தின் வெளிப்பாடாகவே அமைக்கப்பட்டிருக்கின்றது.

**துணைநூல்கள்.**


1. திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் (1956) : மூவர் தேவாரம் : சதுரா பதிப்பகம், எண் 66, செங்குந்தர் வீதி, சோமங்கலம், சென்னை.
2. இராச. வசந்தகுமார்: (2015) : திருஞானசம்பந்த சுவாமிகள் அருளிய தேவாரதிருப்பதிகங்கள்: பன்னிரு திருமுறை ஆய்வு மையம்: பற்பகம் பல்கலைக்கழகம், கோவை.
3. கோபால ஐயர்.ரி.வி.: (1991) தேவாரம் ஆய்வுத்துணை : இன்ரிரியுட் பிரன்ட்காசிஸ், பாண்டிச்சேரி.
4. ஜகந்நாதன். கி.வா.: (1957) நவக்கிரகம்: கலைமகள் காரியாலயம், மைலாபூர்.
5. முத்துஸ்வாமி தீட்சிதர் நவக்ரஹ கிருதிகள்:(2007) : ஒலிப்பேழை: டாக்டர் .பேராசிரியர் வேதவல்லி.
6. ரங்கராமானுஜ அய்யங்கார். ஆர்: (1993): கிருதிணிமாலை, மூன்றாம் பாகம்: ஶ்ரீ க்ருதி மணிமாலை: